## ஹோமியோபதி மருத்துவ சபை – 2016

---

ஹோமியோபதி மருத்துவ சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை ஹோமியோபதி மருத்துவ சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 21(ஊ) இன் பிரகாரம் சபையின் பணிக்கொடை ஒதுக்கும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08**

சபைக்கு எதிராக காணப்படும் 05 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டின் போது மருந்துக் கொள்கலன்கள் கொள்வனவு செய்தல் நுகர்வு தொக்குகளுக்கு வரவு வைப்பதற்குப் பதிலாக முற்றாக செலவு எனக் கணித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் ரூபா 504,000 தொகை மற்றும் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுகர்வு தொக்குகளின் பெறுமதி ரூபா 633,000 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) 19 ஊழியர்களுக்கான பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா 597,104 தொகை எனினும் அதற்காக ரூபா 376,884 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடை ஏற்பாடுகள் ரூபா 220,220 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) பரீட்சைக் கட்டணமாக 2014 ஆண்டின் போது சபை நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 195,900 தொகை சுகாதார, போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் நடைமுறைக் கணக்கொன்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அவ்வருமானம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால் தொடர்ந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக்கூற்றுக்களில் பணமும் பணத்திற்காக சமமானவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ஈ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,812,738 தொகைக்காக வருடாந்த பெறுமானத்தேய்வு கணித்து கணக்கீடு செய்திருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிலுவைச் சமன்பாட்டின் பிரகாரம் அரச மீண்டுவரும் ஏற்பாடுகள் ரூபா 12,663,330 தொகை எனினும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த நிதி செயலாற்றுகை கூற்றின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 12,596,733 தொகையாக இருந்தமையால் ரூபா 66,597 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

2016 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 08 செலவு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 192,156 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் 6 செலவு விடயங்களில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 594,126 ஆக காணப்பட்டது. ஆண்டிற்கான செலவுகள், எதிர்காலத்திற்கான செலுத்திய மற்றும் செலுத்த வேண்டிய செலவுகளின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பொதுப் பேரேட்டில் உரிய பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 422,515 இற்கான பற்றாக்குறையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 271,598 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 694,113 இற்கான வீழ்ச்சி ஒன்றினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவுகள் ரூபா 1,288,106 இனால் அதிகரித்திருந்த போதிலும் அரச மீண்டுவரும் ஏற்பாடுகள் அதிகரித்தல் ரூபா 570,610 தொகை மாத்திரம் காணப்பட்டமையால் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை இடையுறாத பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2012 ஆண்டின் போது ரூபா 29,305 தொகையாகக் காணப்பட்டது. 2014 ஆண்டளவில் ரூபா 170,636 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது. எனினும் 2015 ஆண்டின் போது ரூபா 271,598 இற்கான மிகையொன்றாகி இருந்த போதிலும் மீண்டும் 2016 ஆண்டின் போது ரூபா 422,515 இற்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத

சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட போது 2012 ஆண்டின் போது ரூபா 4,517,886 தொகைக்கான பங்களிப்பு 2015 ஆண்டின் போது ரூபா 9,951,274 வரை 6 சதவீதம் முதல் 93 சதவீதத்திற்கு இடையே தளம்பலுடனான வளர்ச்சி அடைந்திருந்தது. எனினும், 2016 ஆண்டின் போது பங்களிப்பு ரூபா 10,015,998 வரை வளர்ச்சி அடைந்திருந்த போதிலும் அவ் வளர்ச்சி 2015 ஆண்டிற்கு ஒப்பாக ஒரு சதவீதம் மாத்திரமே இருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராகவுள்ள சட்ட சம்பவங்கள்

மருத்துவ சபையில் கடமையாற்றிய மருத்துவர் ஒருவரை மற்றும் தொழிலாளர் ஒருவரை சேவையில் இருந்து நீக்கியதற்கு எதிராக முறையே ரூபா 3 மில்லியன் தொகை மற்றும் ரூபா 2 மில்லியன் தொகை வீதம் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக, நிலுவைச் சம்பளம் செலுத்துதல் மற்றும் மருத்துவ சபையை கலைத்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் மற்றும் பதிவு செய்தல்களை வலு இழக்கச் செய்யும் படி கோரி இரண்டு மருத்துவர்களினால் சபைக்கு எதிராக 2 வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1970 இன் 07 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் பிரகாரம்,

- ஹோமியோபதி முறையின் பிரகாரம் மருத்துவத்தில் ஈடுபடுதலை முறைப்படுத்துதல், நிருவகித்தல், மேம்படுத்தல் மற்றும் தைரியப்படுத்தல்.

- ஹோமியோபதி மருத்துவ விஞ்ஞானத்தை கற்றல் மற்றும் அது தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ளலை தைரியப்படுத்தல், ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி ஒன்று நிறுவுதல் மற்றும் அதனை பராமரிப்புச் செய்தல்.

- ஹோமியோபதி மருத்துவ முறையின் பிரகாரம் நோய்கள் தொடர்பாக நுண்ணாய்வு மற்றும் பொது சுகாதார அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுத்தலை அபிவிருத்தி செய்தல் அல்லது அதனை தைரியப்படுத்தல்.

- ஹோமியோபதி நிறுவனத்தை முறைப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் மற்றும் ஹோமியோபதி ஔடத வகைகள், மருந்துகள் மற்றும் ஏனைய ஔடத கலவைகள் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் வினியோகித்தலை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் என்பன சபையின் குறிக்கோள்களாகக் காட்டப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டின் போது மேற்கூறிய குறிக்கோள்கள் நிறைவேற்றுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹோமியோபதி நடைமுறையின் பிரகாரம் மருந்துத் துறையில் முறைப்படுத்தல், மேம்படுத்துதல் மற்றும் தைரியப்படுத்துதல் ஹோமியோபதி மருத்துவ விஞ்ஞானத்தை கற்றல் மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளலை தைரியப்படுத்தல் ஆகிய முக்கிய குறிக்கோள்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான தயாரித்திருந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்பட்டிருக்காத சந்தர்ப்பங்கள் பின்வருவன.

(i) நடமாடும் பிணிஆய்வு நிலையங்கள் 21 நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அவற்றில் 11 உம் நடத்தியிருக்கவில்லை.

(ii) ஹோமியோபதி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தும் 03 பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல், சுகாதார அமைச்சின் மற்றும் அனைத்து நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தலுக்காக 02 கருத்தரங்குகள் நடாத்துதல் மற்றும் Web home Page ஒன்று ஆரம்பித்தல் ஆகிய திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) ஹோமியோபதி மருத்துவர்களின் சேவை மற்றும் அனுபவங்களை மதிப்பாய்வு செய்யும் 02 செயலமர்வுகள் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் அந்தச் செயலமர்வுகள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) ஹோமியோபதி மருத்துவ சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட நிருவாக நடைமுறை ஒன்றினை அறிமுகப்படுத்துதல், பிரமாணங்களை ஆக்குதல் மற்றும் வர்த்தமானியில் பிரசுரித்தல், ஹோமியோபதி மருந்து வகை உற்பத்தி தொடர்பாக சந்தையினை எழிதில் கிடைக்கும் நிலையை உறுதிப்படுத்துவதற்காக துணைச் சட்டங்கள் ஆக்கல், ஹோமியோபதி மருந்துக் கலஞ்சியங்கள் மற்றும் மருந்து விற்பனை நிலையங்கள் நிறுவுவதற்காக நிதியங்களை ஏற்படுத்தல் மற்றும் மருந்து தொக்கு இறக்குமதி செய்தல், வினியோகிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை இது தொடர்பான எந்த செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஹோமியோபதி மருத்துவ கல்லூரி ஆரம்பிப்பதற்காக 2008 ஆண்டின் போது கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு 2009 ஆண்டின் போது தளபாடங்கள் உபகரணங்கள் வழங்கியிருந்த போதிலும், அதன் கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் தொடர்பாக சட்ட வரையறை தயாரிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமையால் 2017 செப்தெம்பர் 19 திகதி வரை கல்வி விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கொள்வனவு செய்திருந்த ரூபா 1,199,254 இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய கட்டிடம் 06 வருடங்களை விட மிகையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2012 ஜனவரி 05 ஆம் திகதி நடைபெற்ற துணை நிருவாகக் குழு கூட்டத்தின் போது தற்போது காணப்படும் 07 பிணி ஆய்வு நிலையங்களுக்கு பொதுவான கட்டளை கோவையொன்று தயாரிப்பதற்காகவும், 2013 ஆகஸ்ட் 29 ஆம் திகதி நடைபெறாமல் துணை நிருவாகக் குழுக் கூட்டத்தின் போது 14 புதிய பிணி ஆய்வு நிலையங்களுக்கான பதவிகளை அங்கீகாரம் பெறுவதற்காக மற்றும் ஹோமியோபதி கல்வி நிறுவனங்கள் தொடர்பான விதிகள் மற்றும் தேவைகளை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் 2014 ஜனவரி 08 ஆம் திகதி நடைபெற்ற துணை நிருவாகக் குழுக் கூட்டத்தில் ஹோமியோபதி மருந்து வகை உற்பத்தி, இறக்குமதி மற்றும் வினியோகம் தொடர்பாக 1981 இன் ஹோமியோபதி கட்டளைகளை மேலும் விரிவாக்கி போதியளவினதாக சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் தயாரிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 செப்தெம்பர் 19 திகதி வரை அத்தீர்மானங்கள் செயற்படுத்தியிருக்கவில்லை.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

தேவையினை உரிய முறையில் இனங்காணாமல் கொள்வனவு செய்தல் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சிறிய அளவிலாக மருந்து கொள்கலன்கள் (டப்பி) 170,000 அலகுகள் மற்றும் மத்திய அளவான 172,000 அலகு டப்பிகள் மீதியாக இருந்தன. சபையின் கட்டிட வளவில் போதியளவு மற்றும் தரமான களஞ்சிய வசதிகள் காணப்படாமையால் மருந்துக் கொள்கலன்கள் (டப்பி) பாதுகாப்புடனும் கிருமிகள் இன்றியும் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்காததுடன் மூடிகள் சேதப்பட்டு அசுத்தத்துடன் காணப்பட்டது. இதன் காரணமாக மொத்தமாக ரூபா 92,750 தொகை பெறுமதியான மருந்து கொள்கலன்கள் (டப்பிகள்) சுமார் 50,500 எண்ணிக்கையான தொகையொன்று பயன்படுத்த முடியாத நிலைமை அடைந்திருந்ததென 2017 செப்தெம்பர் 19 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருந்து அமைச்சினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் பீஈடீ/12 இன் பிரிவு 5.2 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சபையின் வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்புடைய மதிப்பீட்டுப் பாதீடு ஒன்று தயாரித்து அதனை ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.3 தீர்க்கப்பாத கணக்காய்வுப் பந்திகள்

நடைமுறை நிலைமைக்கு பொருந்தக் கூடிய விதமாக சபையின் பிரமாணங்கள் நாளதுவரையாக்கப்பட்ட வேண்டுமென 2010 செப்தெம்பர் 15 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தெரிவுக் குழு கட்டளையிட்டிருந்தது. 2016 இன் 10 ஆம் இலக்க புதிய ஹோமியோபதிச் சட்டம் 2016 ஜுலை 29 ஆம் திகதி முதல் வினைப்படுத்தப்பட்டிருந்ததுடன் புதிய மருத்துவ சபை 2016 அக்தோபர் மாதத்தில் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதி வரை பொது முயற்சிகளுக்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கட்டளைகள் அமுல் நடத்தியிருக்கவில்லை.

## 5.4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. ஆரம்ப பயன்படுத்தும் புத்தகங்கள், பொதுப் பேரேடு மற்றும் நாள்வழிக் குறிப்புக்களுடன் கணக்கு விடயங்கள் பேணப்படல் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.